ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1881/10 - 2014 සැප්තැම්බර් මස 23 වැනි අඟහරුවාදා - 2014.09.23

*1881/10 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 23 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 4/2007*

**1961 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, ஆயுர்வேதச் சட்டம்**

*1961 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, ஆயுர்வேதச் சட்டத்தின் 18 ஆம் பிரிவின் கீழ் ஆயுர்வேத மருத்துவப் பேரவையினால் ஆக்கப்பட்டவிதிகள்.*

தவிசாளர்,
ஆயுர்வேத மருத்துவப் பேரவை.

கொழும்பு,
*2014, ஒற்றோபர் 01.*

விதிகள்

*1.* இவ்விதிகள் 2013 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, ஆயுர்வேதத் தாதிமார் (உயர்தொழிற்சார் ஒழுக்கவியற் சேவை) விதிகள் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், 2014 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

**ஆயுர்வேதத் தாதி உயர்தொழிலின் பொறுப்பு**

*2.* தாதித் தொழிலானது அனைத்துலக ரீதியில் ஏற்றங்கீகரிக்கப்பட்டவொரு அவசியத் தேவையாகும். ஆதலால் பின்வருவனவற்றைச் செய்தல் ஒவ்வொரு ஆயுர்வேதத் தாதியினதும் கடமையாதல் வேண்டும் :-

(அ) உடனலத்தை மேம்படுத்துதல் ;
(ஆ) குணப்படுத்துதல் ;
(இ) உடனலத்தை மீட்டெடுத்தல் ; அத்துடன்
(ஈ) துன்பத்தைக் குறைத்தல்.

*3.* தாதித் தொழிற் சேவையின் உள்ளார்ந்த சிறப்புப் பண்பொன்று, நோயாளிகளின் கலாச்சார உரிமைகள், வாழ்வதற்கான உரிமை, மரியாதைக்கான உரிமை மற்றும் மதிப்புடன் நடத்தப்படுவதற்கான உரிமை என்பன உட்பட அவரது அல்லது அவளது மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தலாகவுள்ளது. தாதித்தொழில் ஓர் உயர்வான உயர் தொழிலாகவும் இனம், நிறம், சாதி, வயது, ஊனமுறுகை அல்லது உடனல நிலைமை, பால்சார் திசையமைவு, அரசியற் கருத்தாய்வியல், சமூக அந்தஸ்து மற்றும் பால் என்பவற்றைக் கவனத்திற்கொள்வதன் மூலம் மட்டுப்படுத்தப்படாததாகவும் உள்ளது.

4. ஆயுர்வேத தாதியொருவர் ஒரு தனியாளுக்கு, ஒரு குடும்பத்துக்கு அல்லது முழுச் சமுதாயத்திற்கும் சேவையளித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய சேவையின் போது, சுகாதாரத் துறையிலுள்ள ஏனைய தொடர்புபட்ட சேவைகளுடன் இணைந்து செயற்படுதலும் வேண்டும்.

**ஆயுர்வேதத் தாதியும் பொதுமக்களும்**

5. உடனலக் கவனிப்புத் தேவையாகவுள்ள ஆட்களே ஓர் ஆயுர்வேதத் தாதியின் முதன்மைப் பொறுப்பாகவுள்ளது. ஆதலால், ஆயுர்வேதத் தாதியொருவர் -

(அ) நோயாளி, அவரது கும்பத்தினர் மற்றும் பொதுமக்களின் மனிதவுரிமைகள், விழுமியங்கள், வழக்காறுகள் மற்றும் மதநம்பிக்கைகள் என்பனவற்றுக்கு மதிப்புக் கொடுக்கும் ஒரு சூழலை உருவாக்குவதற்கு முயற்சித்தல் வேண்டும் ;

(ஆ) உடனலக் கவனிப்பு மற்றும் வேறு தொடர்புபட்ட சிகிச்சையை வழங்குவதற்கு நோயாளியின் சம்மதத்தைப் பெறும் நோக்குடன் சுகவீனம் தொடர்பாக அவருக்கு/அவளுக்குச் செம்மையான, உரிய நேரத்திலான மற்றும் போதியளவான தகவல்களை வழங்குதல் வேண்டும் ;

(இ) நோயாளியின் தனிப்பட்ட தகவல்கள் பின்வருமாறு வெளிவிடப்பட்டாலொழிய, அத்தகைய தகவல்கள் தொடர்பாக அந்தரங்கத்தன்மையைப் பேணுதல் வேண்டும் ; ஒன்றில் -

(i) நோயாளியின் அனுமதியுடன் ;

(ii) நோயாளியின் மிகச்சிறந்த நலனுக்காக நோயாளியின் கிட்டிய உறவினரொருவருக்கு ; அல்லது

(iii) ஆயுர்வேத மருத்துவப் பேரவையினால், ஏதேனும் சட்ட நீதிமன்றத்தினால் அல்லது வேறெவரேனும் சட்டமுறையான அதிகாரசபையினால் அவ்வாறு செய்யும்படி தேவைப்படுத்தப்படும் போது ;

(ஈ) தாதித்தொழிற் சேவையை வழங்கும்போது, நோயாளிகளிடையே மூலவளங்களைப் பகிர்ந்தளிக்கையிலும் மற்றும் நோயாளிகளுக்கு உடனலக் கவனிப்பு வசதியை வழங்குவதிலும் ஒப்புரவையும் நீதியையும் பிரயோகித்தல் வேண்டும்.

**ஆயுர்வேதத் தாதியும் மற்றும் தாதித்தொழிற் செயல்முறையும்**

6. ஆயுர்வேதத் தாதி, எல்லா நேரங்களிலும், உயர்தொழிலின் ஆதியுச்ச நியமங்களைப் போற்றிக்காத்தலும் மற்றும் தொடர்ச்சியான கல்வி மற்றும் செயல்முறை என்பவற்றினூடாக அதனைப் பேணுதலும் வேண்டும்.

7. ஆயுர்வேதத் தாதி, கவனிப்பை வழங்குவதற்கான ஆற்றல் பாதிக்கப்படாத வகையில் தமது சொந்த உடனலத்தைப் பேணுதல் வேண்டும்.

8. ஆயுர்வேதத் தாதி, உயர்தொழிலின் மரியாதையைப் பிரதிபலிக்கும், அதன் தோற்றத்தை மேம்படுத்தும் மற்றும் மக்களின் நம்பிக்கையைப் பெறும்வகையிலான அத்தகையவொரு முறையில் நடந்துகொள்ளுதல் வேண்டும்.

9. ஆயுர்வேதத் தாதி, கவனிப்பை வழங்கும்போது புதிய தொழிநுட்பவியலையும் மற்றும் விஞ்ஞான ரீதியில் முன்னேற்றமான வழிமுறைகளையும் பயன்படுத்துகையில், அத்தகைய பயன்பாடு நோயாளியின் கவனிப்பு, உரிமைகள் மற்றும் மதிப்பை எவ்வகையிலும் பங்கப்படுத்தாமலிருப்பதை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

10.ஆயுர்வேதத் தாதி, அதியுச்ச நயநாகரிகத்துடன் செயல்புரிவதற்கும் மற்றும் நோயாளியுடன் வெளிப்படையான கலந்துரையாடலில் ஈடுபடுவற்கும் முயற்சித்தல் வேண்டும்.

**ஆயுர்வேதத் தாதியும் மற்றும் தாதித்தொழில் உயர்தொழிலும்**

11. ஆயுர்வேதத் தாதி, மருத்துவகச் செயல்முறையை முகாமை செய்வதற்கும் மற்றும் ஆராய்ச்சி கல்வி தொடர்பான ஏற்றங்கீகரிக்கப்பட்ட நியமங்களைத் தீர்மானிப்பதிலும் நடைமுறைப்படுத்துவதிலும் உதவுதல் வேண்டும்.

12. ஆயுர்வேதத் தாதி, உயர்தொழிற்சார் விழுமியங்களை அபிவிருத்தி செய்வதிலும் போற்றிக்காப்பதிலும் முனைப்பாகப் பங்குபற்றுதல் வேண்டும்.

13. ஆயுர்வேதத் தாதி, ஆக்கபூர்வமான பொதுமக்கள் சேவையையும் மற்றும் சமுக பொருளாதார ரீதியில் ஒப்புரவான தொழில் நிபந்தனைகளையும் உருவாக்குவதற்கு உதவுதல் வேண்டும்.

*14.* ஆயுர்வேதத் தாதி, சூழலைப் பாதுகாத்தலும் மற்றும் உடனலத்தின் மீது சூழலின் செல்வாக்குப் பற்றி அறிந்தவராயிருத்தலும் வேண்டும்.

**ஆயுர்வேதத் தாதியும் சக ஊழியர்களும்**

*15.* ஆயுர்வேதத் தாதி, சகாக்களுடனும் வேறு சக ஊழியர்களுடனும் சுமுகமான உறவுமுறையைப் பேணுதலும் மற்றும் அவர்களுடன் ஒருங்கிணைந்து செயலாற்றுதலும் வேண்டும்.

*16.* ஆயுர்வேதத் தாதி, பணியாட்டொகுதி உறுப்பினரொருவரின் மூலம் அல்லது வெளியாளொருவரின் மூலம் ஒரு தனியாளுக்கு, குடும்பத்துக்கு அல்லது பொதுமக்களுக்கு உணரப்பட்ட உடனல அச்சுறுத்தல் ஏற்படும் பட்சத்தில், அந்த உடனல அச்சுறுத்தலிலிருந்து அத்தகைய தனியாளை, குடும்பத்தை அல்லது பொதுமக்களைப் பாதுகாப்பதற்குத் தோதான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

*17.* ஆயுர்வேதத் தாதி, பணியாட்டொகுதி உறுப்பினர்களின் உயர்தொழில்சார் நடத்தையை முன்னெடுத்துச் செல்வதற்கும் மேம்படுத்துவதற்கும் அவர்களுக்கு உதவுதல் வேண்டுமென்பதுடன், அவர்களுக்கு வழிகாட்டுதலை வழங்குதலும் வேண்டும்.

**தண்டனைகள்**

*18. (1)* ஆயுர்வேதத் தாதி, ஒவ்வொருவரும் இதனகத்துப்பின்னர் குறித்துரைக்கப்பட்ட விதிகளைக் கடைப்பிடித்தல் வேண்டுமென்பதுடன், அவற்றுள் ஒன்றின் அல்லது அதற்கதிகமானவற்றின் மீறுகை, உயர்தொழிற்சார் துர்நடத்தையாகக் கருதப்படுதலும் வேண்டும்.

*(2)* 1973 ஆம் ஆண்டின் ஆயுர்வேத (ஒழுக்காற்று) ஒழுங்குவிதியின் கீழ் நடாத்தப்பட்டவொரு விசாரணையின் பின்னர் உயர்தொழிற்சார் துர்நடத்தையை புரிந்துள்ளமைக்குக் குற்றவாளியாகக் காணப்பட்டுள்ள ஆயுர்வேதத் தாதியொருவரின் பதிவைப் பேரவை இல்லாதாக்கலாம் அல்லது இடைநிறுத்தி வைக்கலாம்.

(3) (அ) ஆயுர்வேதத் தாதியொருவரினால் உயர்தொழிற்சார் துர்நடத்தைச் செயலொன்று புரியப்பட்டமையைத் தீர்மானிப்பதில், பேரவையானது இவ்விதிகளின் ஏற்பாடுகளினது எல்லைகளினுள் மட்டுமே செயலாற்றுதலாகாது.

(ஆ) ஐயத்தைத் தவிர்ப்பதற்காக, குறிப்பிட்டவொரு செயலைப்புரிதல் இவ்விதிகளில் உள்ளடக்கப்பட்டிருக்காமலிருந்து, ஆனால் அத்தகைய செயலைப் புரிதல் ஆயுர்வேதத் தாதித்தொழில் உயர்தொழிலுக்கு அவமதிப்பு விளைவிக்கின்றதெனப் பேரவைக்கு வெளிப்படையாகத் தெரியுமிடத்து, பேரவையானது, 1973 ஆம் ஆண்டின் ஆயுர்வேத (ஒழுக்காற்று) ஒழுங்குவிதிகளின் கீழ் வழக்கு நடவடிக்கைகளைத் தொடுக்கலாமென இத்தால் வெளிப்படுததப்படுகின்றது.

**பொருள்கோடல்**

*19.* இவ்விதிகளின் நோக்கங்களுக்காக-

"பேரவை" என்பது, 1961 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, ஆயுர்வேதச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட ஆயுர்வேத மருத்துவப் பேரவை என்று பொருளாகும் ;

"ஆயுர்வேதத் தாதி" என்பது, 1961 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, ஆயுர்வேதச் சட்டத்தின் கீழ்ப் பதிவு செய்யப்பட்ட ஆயுர்வேதத் தாதியொருவர் என்று பொருளாகும்.

10- 349

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.